# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 141/2024

Prosecution Witness PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ. மாணிக்கம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : 29 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 21st day of November 2025.

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்)

<u>முதல் விசாரணை:-</u>

1. நான் சேலம் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மின் கம்பங்கள் சுமக்கும் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 2023 ஆம் வருடம் அக்டோபர் மாதம் முத்தூர் பகுதியில் மின் கம்பம் சுமக்கும் வேலை பார்த்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது வேலைப்பளு அதிகமாக இருந்தது. மாலை சுமார் 7:30 மணியளவில் நான் தங்கி இருக்கும் அறைக்கு சென்றேன். இரவு சுமார் 9 மணி அளவில் நானும் வெங்கடாசலம் மற்றும் கார்த்திக் ஆகிய மூன்று பேரும் இருசக்கர வாகனத்தில் மாக்கினாம்பட்டியில் இருந்து சின்ன பாலத்தில் உள்ள அரசு மதுபான கடைக்கு சென்றோம்.

2. எதிரி இருசக்கர வாகனம் ஓட்ட நாங்கள் இருவரும் பின்னால் அமர்ந்து சென்றோம். இரவு சுமார் 9:30 மணியளவில் இடம் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை நாங்கள் சென்று கொண்டிருந்த பொழுது நாய் ஒன்று குறுக்கே வந்துவிட்டது. அதனால், நிலை தடுமாறி சாலையில் விழுந்து விட்டோம். எனக்கு தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. மூன்று பேரும் மயக்க நிலையில் இருந்தோம். நான் மயக்கம் தெளிந்து பார்த்தபொழுது கார்த்திக் என்பவர் சாலையில் விழுந்து கிடந்தார். அவரும் எதிரி வெங்கடாசலம் இருவரும் மயக்கமான நிலையில் இருந்தார்கள்.

3. அப்போது அக்கம் பக்கத்தில் யாரும் இல்லை. என்னுடைய தொலைபேசி மூலம் 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக நாங்கள் மூன்று பேரும் சென்றோம். மருத்துவர்கள் பரிசோதனை செய்துவிட்டு கார்த்திக் இறந்துவிட்டார் என்று

கூறினார்கள். எனக்கு மன அழுத்தமாக இருந்ததால் நான் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளவில்லை. எதிரி வெங்கடாசலத்திற்கு காயம் ஏற்பட்டதால் அவர் சிகிச்சையில் இருந்தார்.

4. அதன் பிறகு நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். ஆனால் அதில் அடங்கியுள்ள சங்கதிகள் பற்றி எனக்கு தெரியாது. (புகாரில் உள்ள கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆவணமாக குறியீடு செய்யப்படுகிறது). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

(கற்றறிந்த அரசு தரப்பு உதவி குற்றவியல் வழக்கறிஞர் சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காமல் வேறு விதமாக சாட்சி கூறியுள்ளதால் பிறழ் சாட்சியாக பாவித்து அரசு தரப்பை குறுக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். பரிசீலிக்கப்பட்டது.)

சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை:-

5. கடந்த 7.10.2023 அன்று இரவு சுமார் 11 மணியளவில் மாக்கினாம்பட்டியில் இருந்து பாலமநல்லூர் ரோடு கணேசபுரம் லே-அவுட் ஆர்ச் முன்பாக எதிரி இருசக்கர வாகனம் ஓட்ட நானும் கார்த்திகண் என்ற நபரும் பின்னால் அமர்ந்து வந்தோம் என்றும் அப்போது எதிரி இருசக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் இயக்கியதால் சாலை விபத்து ஏற்பட்டு கார்த்திகண் உயிரிழந்து விட்டார் என்றும் எனக்கு காயம் ஏற்பட்டது என்றும் போலீசார் விசாரணையின் போது கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open court, read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/J.Saravanakumar)
Judicial Magistrate No.I,
Pollachi.